முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**அசல் வழக்கு எண்.243/2015**

The Oaths Act 1969(Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 12.12.2023 நாளாகிய இன்று முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி திருமதி.S.Suganiya Sri, B.A.B.L.,(Hons),M.L.,PGDAML. அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 12.12.2023 | சாட்சி | **வா.சா.1** |
| பெயர் | **தங்கராஜி** | வயது.. | 56 |
| தந்தை பெயர்.. | **பாண்டியன்** | கிராமம்.. | **கல்குணம்** |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு** 2, 3, 7,8 **பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**..

**1. வழக்கு சொத்துக்கள் சிதம்பரத்திலிருந்து 10 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள அழிச்சிக்குடி கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். என்னுடைய சொந்த ஊர் குறிஞ்சிபாடி தாலுக்காவில் உள்ள கல்குணம் கிராமம் என்றால் சரிதான். அழிச்சிக்குடி கிராமத்திலிருந்து கல்குணம் கிராமம் சுமார் 15 கிலோ மீட்டர் இருக்கும். 1ம் வாதி ஜெயலட்சுமி என்னுடைய மாமியார் என்றால் சரிதான். 2ம் வாதி செல்வி என்னுடைய முதல் மனைவி என்றால் சரிதான். என்னுடைய 2வது மனைவி பெயர் கலைமணி, செல்வியின் சகோதரி தான் கலைமணி. கலைமணி எப்போது இறந்தார் என்றால் 2000 ம் வருடம். 1ம் பிரதிவாதி தங்கமணி கலைமணிக்கும் செல்விக்கும் இளைய சகோதரி. ஜெயலட்சுமி கணவர் பெயர் பாலகிருஷ்ணன். பாலகிருஷணின் பெற்றோர்கள் கோவிந்தசாமி மற்றும் ஜெகதாம்பாள் என்றால் சரிதான்.**

**2. எனக்கும் செல்விக்கும் எந்த வருடம் திருமணம் நடந்தது என்றால் 1987. திருமணத்திற்கு முன்பு எனக்கும் வாதிகள் குடும்பத்திற்கும் உறவு முறை ஏதேனும் இருந்தா என்றால் இல்லை. வழக்கு சொத்துக்கள் ஜெகதாம்பாளுக்கு உரிமை உண்டு என்பதை காண்பிப்பதற்கு ஆவணம் என்னிடம் ஏதேனும் உள்ளதா**

என்றால் உள்ளது. வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்படுவதற்கு முன்பு வழக்கு சொத்துக்கள் ஜெகதாம்பாளுக்கு உரிமை உண்டு என்பதை காண்பிப்பதற்கு பத்திரம் இல்லை, கோவிந்தசாமி பெயரில் பத்திரம் இருந்தது. வழக்கு சொத்துக்கள் எல்லாம் கோவிந்தசாமிக்கு பூர்விக சொத்து வருமாணத்திலிருந்து கிரைய பெற்ற சொத்து என்றால் சரிதான். கோவிந்தசாமியின் தந்தை உத்தண்டிக்கு 1924–ல் ஏற்பட்ட பாகபிரிவினையில் சொத்துக்கள் கிடைத்தது என்றால் சரிதான். கோவிந்தசாமி மற்றும் ஜெகதாம்பாளுக்கு பாலகிருஷ்ணன் ஒரே மகன் என்றால் சரிதான், ஒரு மகன் பாலகிருஷ்ணன மற்றும் ஒரு மகள் கஸ்தூரி. கோவிந்தசாமியும் பாலகிருஷ்ணனும் கூட்டுகுடும்பமாக இருந்தார்கள் என்றால் சரிதான்.

3. கஸ்தூரி திருமணமாகி தற்போது எங்கு வசித்து வருகிறார் என்றால் சீயப்பாடி. கோவிந்தசாமி இறந்த வருடம் தெரியுமா என்றால் தெரியாது. கோவிந்தசாமி இறந்த பிறகு அவருடைய சொத்துக்களை குடும்ப தலைவர் என்ற முறையில் பாலகிருஷ்ணன் நிர்வகித்து வந்தார் என்றால் இல்லை, ஜெகதாம்பாள் தான் நிர்வாகம் செய்தார். பாலகிருஷ்ணன் எப்போது இறந்தார் என்றால் உயிருடன் தான் இருக்கிறார். ஜெகதாம்பாள் எப்போது இறந்தார் என்றால் 2003–ல். கோவிந்தசாமி இறந்த பிறகு ஜெகதாம்பாள், பாலகிருஷ்ணன், கஸ்தூரி ஆகியோர் தான் வாரிசுதாரர்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ. 1 ஆவணம் ஏற்படுவதற்கு சுமார் 7 ஆண்டுகளுக்கு முன்பாக கோவிந்தசாமி இறந்திருப்பார் என்றால் இல்லை, வா.சா.ஆ.1 ஏற்படுவதற்கு 10 ஆண்டுகளுக்கு முன்பாக இறந்தார். கோவிந்தசாமி இறந்த பிறகு வழக்கு சொத்துகளின் பட்டா யார் பெயரில் இருந்தது என்றால் ஜெகதாம்பாள், அதற்கு ஆவணம் என்னிடம் உள்ளது. கோவிந்தசாமிக்கு 3பேர் வாரிசாக இருக்கும்நிலையில் மற்ற 2 நபர்கள் ஜெகதாம்பாள் பெயருக்கு விடுதலை பத்திரம் ஏதேனும் எழுதிக் கொடுத்தனரா என்றால் இல்லை.

4. பாலகிருஷ்ணனுக்கும் ஜெயலட்சுமிக்கு எப்போது திருமணம் நடந்தது என்றால் தெரியாது. கோவிந்தசாமி உயிருடன் இருக்கும்போது பாலகிருஷ்ணனுக்கு திருமணம் நடந்ததா என்றால் தெரியாது. வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்படும்போது செல்வி மற்றம் கலைமணி ஆகியோர் உயிருடன் தான் இருந்தார்கள், அப்போது

செல்விக்கு 4 வயது, கலைமணிக்கு 2 வயது, தங்கமணி அப்போது பிறக்கவில்லை. 1976 ஆண்டின்போது வாதிகள் குடும்பத்திற்கும் எனக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை என்றால் சரிதான். அதனால் வா.சா.ஆ.1 ஆவணம் எழுதப்பட்ட விவரங்கள் குறித்தோ, அதில் சாட்சி போடப்பட்ட விவரங்கள் குறித்தோ, எந்த காரணங்களுக்காக அது எழுதப்பட்டது என்பது குறித்தோ எனக்கு தெரியாது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் 9 இன சொத்துக்கள் உள்ளது என்றாலும் வழக்கு சொத்தில் 7 இன சொத்துக்கள் உள்ளது என்றாலும் பாக்கி 2 இன சொத்துக்கள் என்ன ஆனது என்றால் எனக்கு தெரியாது.

5. வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்பட்ட பிறகு வழக்கு சொத்துக்கான பட்டா யார் பெயரில் இருந்தது என்றால் ஜெகதாம்பாள் பெயரில் தான் இருந்தது. 1976–1987 வரை வழக்கு சொத்துக்களை யார் சாகுபடி செய்தார் என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்துக்களில் தற்போது வீடு உள்ளதா என்றால் 1ம் இன சொத்தில் மட்டும் வீடு இருந்து தற்போது இடிந்து விட்டது மற்ற சொத்துக்களில் வீடு இல்லை. மற்ற சொத்துக்களில் என்ன என்ன சொத்துக்கள் நிலம் மற்றும் மனை என்றால் 18 செண்ட மட்டும் மனையாக இருந்தது பாக்கி அனைத்தும் நிலங்கள். 1 இன சொத்தான புல எண் 102/1 –ல் 3 பாகத்தில் ஒரு பாகம் தான் கோவிந்தசாமிக்கு உரிமை உள்ளது என்றால் சரிதான். பாக்கி 2 பாக நிலங்கள் யாருக்கு உரிமையானது என்றால் தெரியாது. பாக்கி 2 பாகங்களில் உரிமை உள்ளவர்களை இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்து உள்ளேனா என்றால் இல்லை. 6ம் பிரதிவாதி சாரங்கபாணி , 9ம் பிரதிவாதி தண்டபாணி கலியமூர்த்தியின் மகன்கள் என்றால் சரிதான். கலியமூர்த்திக்கு இந்த வழக்கின் 1ம் இன சொத்தின் 11 சென்ட் நிலம் உரிமை உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. 16.08.1975 தேதியிட்ட பாக பத்திரத்தில் கலியமூர்த்தியின் குடும்ப சொத்தாக வழக்கு சொத்தின் 1 இன சொத்தான 11 செண்ட் நிலம் காணப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது.

6. கலியமூர்த்தியின் 11 செண்ட் நிலத்தை 12.05.1978ல் கலியமூர்த்தியும் 7ம் பிரதிவாதி வீரமுத்துவும் செய்துகொண்ட பரிவர்த்தனை பத்திரத்தின்படி 7ம் பிரதிவாதி வீரமுத்துக்கு உரிமையாகிவிட்டது என்றால் எனக்கு தெரியாது. 1வது இன

சொத்தில் பாக்கி உள்ள **3**ல் ஒரு பாக சொத்து அன்பழகன் என்பவருக்கு உரிமையாக இருந்து **14.08.1979**ல் ஏற்பட்ட பரிவர்த்தனை பத்திரத்தின் படி **7**ம் பிரதிவாதி வீரமுத்து அடைந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. **1**வது இன சொத்தில் **3**ல் ஒரு பாகம் கோவிந்தசாமிக்கு உரிமையான சொத்தை கோவிந்தசாமி மகன் பாலகிருஷ்ணனும் அவருடைய மனைவியான **1**ம் வாதி ஜெயலட்சுமியும் **02.08.1978** தேதியில் அன்பழகனுக்கு கிரையம் கொடுத்தார் என்றால் இல்லை.

**சாட்சி விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

sd/-S.Suganiya Sri
Principal District Munsif(FAC)
Chidambaram